[illegible]

தொகுதி 3. மலர் 6.

1921 ஜூன்

ப்ட
LL,9C

ப்ட
LL,9Cனா211,N14
N21.3.6.
186468

உ

செந்திலாண்டவன் திருவடி துணை.

பாலவிநோதினி

அல்லது

குழந்தைகளின் நண்பன்

ஒரு மாதாந்தப் பத்திரிகை.

தொகுதி 3.] 1921௵ ஜூன்மீ [பகுதி 6.

கற்றோர் பெருமை.

கல்லார் பலர்கூடிக் காதலித்து வாழ்கினுநல்
வல்லா னொருவனையே மானுவரோ—அல்லாரும்
எண்ணிலா வான்மீ னிலகிடினும் வானகத்தோர்
வெண்ணிலா வாமோ விளம்பு.

வானத்தில் அநேக நக்ஷத்திரங்கள் கூடி ஒளிவீசிடினும் சந்திரனுக்கு ஒப்பாகாது. அதுபோல் படியாதவர் [illegible]டி, வாழ்ந்தாலும் படித்தவன் ஒருவ[illegible]ர்கள். ஆதலின் "ஓதுவ தொழியேல்"

JL
LL,9C M211 N14
N21.3.6.
186448
186448

புத்தியில்லாதவன் பொருள் பெற்ற புதுமை.

ஒரு குடியானவன் ஒரு மலையடிவாரத்தில் நிலத்தை உழுது பயிர்செய்து ஜீவித்து வந்தான். ஒருசமயம் அவன் தோட்டத்தில் நல்ல விளைவு விளைந்திருந்தது. இந்த விளைச்சலைக் கண்டு ஆசைகொண்ட இந்திரனுடைய வெள்ளை யானை இந்திரலோகத்திலிருந்து பூலோகத்துக் கிறங்கிவந்து தினந்தோறும் இரவில் இந்தத் தோட்டத்து விளைச்சலை வயிறு கொண்டமட்டும் மேய்ந்து சென்றுகொண் டிருந்தது.

விளைச்சல் இப்படி யழிவதைப் பார்த்த குடியானவன், "இப்படிவந்து விளைச்சலை மேய்ந்துபோவது எது?" என்று கவனிக்கத் தொடங்கினன். மறுநாள் இரவு தூங்காமல் விழித்துக்கொண்டே தோட்டக் குடிசையில் படுத்திருந்தான். வெள்ளை யானை வந்து வழக்கம்போல் மேய்ந்தது.

பிறரைப் பின்பற்றுவதனாலுண்டாகும் தாழ்மை.

1. ஒரு வேலையுமில்லாமல் பிறர் வீட்டுக்குச் செல்வது கூடாது. செல்கிறவனே மூடன். அந்த மூடன் நாளடைவில் கிருஷ்ண பக்ஷத்துச் சந்திரனைப் போல் குறைவடைவான்.

2. மூர்க்கனாயிருப்பது கொடிது. வாலிபப் பருவத்தில் வறுமை வருவது கொடிது. இவை இரண்டிலும் பிறர் வீட்டு வாசமும் பிறர் வீட்டுச் சோறும் கொடியவை.

3. சந்திரனுக்கு நக்ஷத்திரக் கூட்டங்களாகிய பரிவாரங்களிருக்கின்றன. அமிர்தமயமான கிரணங்களிருக்கின்றன. நல்ல காந்தியுமிருக்கிறது. இருந்தும் சந்திரன் சூரிய மண்டலத்தை அடை[illegible] அதன் காந்தி குறைகின்றது. அது போல் பி[illegible] பிறவனும் குறைவடைவான்.

சென்னை-600 003

அதைக் கண்டதும் "பாவிப் பயல் யானையே! நீயா வந்து இப்படிப் பயிரை அழிக்கின்றாய்" என்று சொல்லிக்

கொண்டே ஓடி அதன் வாலைப் பிடித்துக்கொண்டான். அந்த யானை உடனே உயரக்கிளம்பி இந்திரலோகம் போயிற்று. குடியானவனும் அதன் வாலைப் பிடித்துக்கொண்டே இந்திரலோகம் போய்ச் சேர்ந்தான்.

இந்திரலோகம் போய்ச் சேரும் பாக்கியம் பெற்ற குடியானவன், அங்குள்ளவரைப் பார்த்து, "இந்த யானை யாருடையது?" என்று கேட்டான். அவர்கள் அவனைக் கண்டு ஆச்சரியப்பட்டது மன்றி அவனுடைய தைரியத்துக்கு மெச்சிக்கொண்டு, "அப்பா இது இந்திரனுடைய யானை" என்றார்கள். குடியானவன் "இந்திரனெங்கே இருக்கின்றான்? அவனை நான் பார்க்கவேண்டும்" என்றான். அவர்கள், இந்திர பவனத்துக்கு வழிகாட்டி அவனை அனுப்பினார்கள்.

குடியானவன் இந்திர பவனத்திற்குள் நுழைந்து, இந்திரனைப் பார்த்து, "நீ யானை வைத்துக்கொண்டு வாழ்வது இப்படித்தானா?—இந்த உலகத்தி லிருந்து பூலோகத்துக்கு வந்து, ஏழையாகிய என் வயலில் மேய்ந்து வயிறு வளர்க்கிறதே, உன் யானை?—அதைக் கட்டி வளர்க்கக்கூடாதா?" என்று கேட்டான். இந்திரன் இவனுடைய பேச்சைக் கேட்டு ஆச்சரியப்பட்டு, நீ தைரியமாய் இங்கே வந்து செய்தி சொன்னதுபற்றிச் சந்தோஷம்; உனக்கு நஷ்டமானதென்ன? கேள், கொடுக்கின்றேன்" என்றான். அவன், "ஒரு வருஷத்துச் சாப்பாட்டுக்குவரும் விளைச்சலல்லவா போய்விட்டது" என்றான். இந்திரன் கேட்டு நகைத்து, ஒரு மரக்கால் நிறையப் பொன் நாணயங்கொடுத்து, "நீ போ" என்று சொல்லி ஒரு விமானத்தில் அவனை யேற்றிவைத்துப் பூலோகத்துக் கனுப்பினான்.

குடியானவன் இப்படிப் பெருந் திரவியத்துடன் வீட்டுக்கு வந்ததும் ஸந்தோஷத்தோடு தான் போய்வந்ததைத் தன் மனைவிக்குச் சொல்லி மிகவும் சுகமாக வாழ்ந்து வந்தான். இப்படி இவன் சுகமாக இருப்பதை அறிந்த அடுத்த வீட்டுக்காரன், "உனக்கென்ன கிடைத்தது? நீ கவலையற்றிருக்கின்றாயே!" என்று ஒருநாள் அவனும் தானும் தனியே இருக்கும்போது கேட்டான். குடியானவன் நடந்ததை நடந்தபடி சொல்லி முடித்தான். அடுத்த வீட்டுக்காரன் தட்டானாதலால், "எங்கே அந்தப் பொன் நாணயத்தை என்னிடம் கொண்டு வந்து இன்று மத்யானத்தில் காட்டு. நான் பார்த்து அது சரியான பொன் நாணயமா, ஓட்டையா என்று தெரிந்து சொல்லுகிறேன்" என்றான். குடியானவன், "ஓகோ இந்திரன் ஓட்டை நாணயங்களைக் கொடுத்திருப்பான், இதனைப் பார்க்கவேண்டும். நல்லவேளை

யாய் நீ வந்தாயே! நாளைக்குப்பகல் அதைக் கொண்டுவந்து காட்டுகிறேன்" என்று கூறினான். இருவரும் ஸந்தோஷமாய்ப் பிரிந்தார்கள்.

பிறகு மறுநாள், குடியானவன் அந்தப் பொன் மரக்காலுடன் தட்டான் வீட்டுக்கு வந்து அதை அவனிடம் காட்டினான். தட்டான் அதை வாங்கிப் பார்த்து, "ஓகோ! இவற்றில் இரண்டொன்று தவிர மற்றவைகளெல்லாம் ஓட்டை நாணயங்கள். இந்திரன் உன்னை ஏமாற்றிவிட்டான்!" என்றான். இதைக் கேட்டதும் குடியானவனுக்கிருந்த ஸந்தோஷமெல்லாந் துக்கமாய் மாறிவிட்டது. பிறகு சற்று நேரத்திற்கெல்லாம், குடியானவன் தட்டானைப் பார்த்து, "இனியென்ன செய்கிறது" என்று கேட்டான். தட்டான், "நீ கவலைப்படாதே! நீ இன்னொருதரம் பயிரிடு. நல்ல விளைச்சல் உண்டாகுந் தருணத்தில் அந்த யானை முன்போல் வரும். வராமலிருக்காது. ருசிகண்டதல்லவா? அப்படி வருமாயின் நாம் அதனுடைய வாலைப் பிடித்துக் கொண்டு இந்திரலோகம் போவோம்; இந்திரனைக் கண்டு நல்ல பொன்நாணயமாகப் பார்த்து வாங்கி வருவோம்.

நற்குணம்பத்து

வாக்கின் நற்குணம்.—1. உண்மையுரைத்தல், 2. நல்ல வார்த்தை பேசுதல், 3. இனியசொல் சொல்லல், 4. பயன் படுமொழி பகரல்.

காயத்தின் நற்குணம்.—1. ஆலயத்திற் கேகுதல், 2. பெரியோரை வணங்கல், 3. தானஞ் செய்தல்.

மனத்தின் நற்குணம்.—1. தயையுடைமை, 2. பேராசையை ஒழித்தல், 3. தெய்வ த்யானஞ் செய்தல்.

காற்றுள்ளபோதே தூற்றிக்கோள், கதவுள்ளபோதே சாத்திக்கோள் என்னும் பழமொழிகளுக்கிணங்க—காலமறிந்து கருமத்தை முடிப்பதே புத்திமானுக்கழகு.

இருவரும் பங்கிட்டுக் கொள்ளலாம். இந்த நாணயம் என்னிடமே இருக்கட்டும். நான் இதனை நல்ல நாணயமாகச் செய்து தருகின்றேன்; கொஞ்சம் சாவகாசத்தில் செய்ய வேண்டும்!" என்று சொன்னான்.

குடியானவன் தட்டானுடைய பேச்சை நம்பிக்கொண்டு ஸந்தோஷமாய் வீடு வந்து சேர்ந்து தன் மனைவியிடம் தட்டான் சொன்னதைச் சொல்லிப் பொன்னை அவனிடம் கொடுத்துவந்ததையும் கூறினான். அவள், தன் புருஷனுடைய அவலமான சயர்த்துக்கு வருந்தி, "அவனிடம் பொன்னையேன் கொடுத்தீர்கள்? ஓட்டையோ, நல்லதோ நம்மிடமிருந்தால் நமது சௌகர்யம்போல் நாம் செய்து கொள்ளலாமே!—இப்படிச் செய்யலாமா?" என்று கண்டித்தாள். குடியானவன், "உனக்கொன்றுந் தெரியாது; பேசாமலிரு. ஓட்டை நாணயத்தை வைத்துக் கொண்டு என்ன செய்கிறது" என்று கூறி மறுநாள் முதற்கொண்டு, தோட்டத்தில் பயிரிடுவதற்கு வேண்டிய முயற்சி செய்யலானான்.

பிறகு கொஞ்சநாளையில் தோட்டத்தில் பயிர் நன்றாய் வளர்ந்து செழித்திருந்தது. வெள்ளையானை வந்து இரவில் மேயத்தொடங்கியது. வெள்ளையானை வந்து மேயவேண்டுமென்பது குடியானவனுடைய பிரார்த்தனையாதலால் அது வந்து மேய்ந்தது கண்டு ஸந்தோஷமடைந்து, மறுநாள் இரவு தட்டானோடு அங்கே வந்து காத்துக் கொண்டிருந்தான். யானைவந்து மேயும் அரவங்கேட்டது. உடனே எழுந்து இருவருமோடினார்கள். குடியானவன் முன்னும் தட்டான் பின்னுமாக ஓடினார்கள். முன்னே சென்ற குடியானவன் யானையின் வாலைப் பிடித்துக்கொண்டான். பின்னே சென்ற தட்டான் குடியானவனுடைய காலைப் பிடித்துக் கொண்டான். யானை உயரக்கிளம்பிச் சென்றது. இப்போது

வயிற்றை நோக்கி ஒரு வறிஞன் சொல்லுவது—
ஒருநாள் உணவை யொழியென்றா லொழியாய்
இருநாளைக் கேலென்றால் ஏலாய்—ஒரு நாளும்
என்னோ வறியா யிடும்பைகூர் என்வயிறே
உன்னோடு வாழ்த லரிது.

வயிறு படுத்தும் இந்தப் பாட்டை நினைத்துப் பார்ப்பவன் சோம்பேறியா யிருப்பானா?



குடியானவன் யானையின்வாலைப் பிடித்துக்கொண்டுதொங்க, தட்டான் குடியானவன் காலைப்பிடித்துக்கொண்டு தொங்குகின்றான். யானை போய்க் கொண்டிருக்கிறது.

இப்போது தட்டானும் குடியானவனும் பல பேச்சுகள் பேசிக்கொண்டே போகிறார்கள். அப்பொழுது தட்டான், "அண்ணேன், உனக்குப் பொன் அளந்துகொடுத்த மரக்கால் பெரியமரக்காலா? எவ்வளவு பெரிதாயிருக்கும்?" என்று கேட்டான். குடியானவன், தன் கையால் மரக்காலின் பரிமாணத்தைக் காட்ட எண்ணி யானையின் வாலை

விட்டுவிட்டான். உடனே தட்டான் கீழேயும் குடியானவன் அவன்மேலுமாக, இருவரும் விழுந்தார்கள். தட்டான் கீழே கெட்டித்தரையிலே விழுந்தமையால் அவன் மண்டையுடைந்து இறந்தான். குடியானவன் அவன் மேலே விழுந்தமையால் குற்றுயிராய்க் கிடந்து வெகு நேரத்திற் கப்பால் எழுந்து தன் விதியை நினைத்துக்கொண்டு வீடுபோய்ச் சேர்ந்தான். அவன் மனைவி இவனுடைய கோலத்தைக்கண்டு நடந்ததென்ன வென்று விசாரித்துச் செய்தி தெரிந்துகொண்டு "வீணாசையால் வந்த விபத்திது! நமக்குக் கிடைத்தது போதுமென் றிருந்திருக்க வேண்டும்; நான் சொல்லியும் கேட்கவில்லை. பாவி தட்டான், நம்மை வஞ்சிக்க நினைத்தான். நமக்கு நினைத்தகேடு அவனுக்கே வந்தது; 'கெடுவான் கேடுநினைப்பான்' என்பது வீணாகுமா?" என்று கூறித் தன் கணவன் குணமடைய வேண்டிய சிகிச்சை செய்வதில் கவனஞ் செலுத்தினாள்.

குழந்தைகளே!—இந்தக் கதை உங்களுக்கென்ன தெரிவிக்கிறது! வீணாசை உதவாதென்பதையும், வஞ்சனை கூடாதென்பதையும், வீணாசையால் உள்ளதும் போகுமென்பதையும் வஞ்சனையால் மீளமுடியாத கேடு விளையுமென்பதையும் தெரிவிக்கிறதல்லவா?—ஆதலின் வீணாசையை விட்டுவிடுங்கள். வஞ்சனைக்கு அஞ்சுங்கள்—நல்லதை யெண்ணி நலம் பெறவே நாடுங்கள்.

தான்கெடினுந் தக்கார்கேடெண்ணற்க—

It is better to suffer wrong than to do it

துஷ்டருக்கு இடங்கொடாதே!

நன்றறியாத் தீயோர்க் கிடங்கொடுத்த நல்லோர்க்குந்
துன்று கிளைக்குந் துயர்சேரும்—குன்றிடத்திற்
பின்னிரவில் வந்தகரும் பிள்ளைக் கிடங்கொடுத்த
அன்னமுதற் பட்டதுபோ லாம்.

ஒருவராலும் ஏறமுடியாத ஒரு பெரிய மலையினுச்சியிலிருந்த ஒரு குகையில் அன்னப்பறவைகள் சில ஒன்றுகூடி வசித்து வந்தன. அப்பொழுது ஒருநாளிரவு ஒரு காக்கை அங்குப்போய், "ஓ அரசவன்னமே! நான் மழையிலவஸ்தைப்பட்டுத் திசைதப்பி வந்துவிட்டேன். இன்று நீ இந்த உங்கள் குகையில் தங்க எனக்கு இடங்கொடுத்து ஆதரிக்கவேண்டும். இது பெரிய உபகாரமாகும்" என்று கேட்டுக்கொண்டது. இதைக் கேட்டதும் அதனருகிலிருந்த இன்னொரு அன்னம் "இதற்கு இடங்கொடுப்பது கூடாது. இடங்கொடுத்தால் நமக்குத் தீங்குண்டாகும். இது துஷ்டப் பிராணியிலே சேர்ந்தது. துஷ்டர்களுக்கிடங்கொடுத்தால் துன்பமுண்டாகுமென்பது திண்ணம்" என்று கூறியது.

அரசவன்னம், "அப்படியல்ல; காக்கைகளின் குணம் உனக்குத் தெரியாது. அவை உதய காலத்திலெழுந்திருக்கின்றன. இது பெரிய நல்ல குணம். உணவைச் சுற்றத்தோடுண்ணுகின்றன. இது இரண்டாவதான நல்ல குணம். ஆதலின் இதை இச்சமயம் காப்பதே தருமம்" என்று கூறி இடங்கொடுத்தது.

காக்கை, "உங்கள் தருமம் உங்களைக் காக்கும்?" என்று கூறி மனமகிழ்ச்சியோடு அங்கு அன்றிரவு தங்கி

யிருந்து, மறுநாள் அதிகாலையிலெழுந்து பறந்துபோய்விட்டது.

இப்படித் தங்கியிருந்து சென்ற காக்கை, இரவில் அந்தக் குகையில் ஓரிடத்தில் எச்சமிட்டது. இதிலிருந்த ஓர் ஆலம் வித்து கொஞ்ச நாளைக்கெல்லாம் முளைத்துச் செடியாகிப் பிறகு மரமாய் நாலா பக்கத்திலும் விழுதுவிட்டது. அந்த விழுதிலொன்று கொஞ்சநாளையில் தரையில் வந்து படிந்து வேரூன்றியது. இதைப் பிடித்துக்கொண்டு ஒரு வேடன் மலையினுச்சிக்குப் போய் வலை வீசி அன்னங்களைப் பிடித்துவிட்டான்.

அப்பொழுது அன்னங்கள், இந்தக் கஷ்டம் தங்கட்வந்ததற்குக் காரணம், துஷ்டக் காகத்திற்கு இடங்கொடுத்ததுதானென்று தெரிந்துகொண்டு, "இனி என்ன செய்வது! இந்த விபத்திலிருந்து நாம் தப்ப முடியாது. இது புத்திக் குறைவினால் வந்தது!"—என்று பேசிக்கொண்டன. அதைக் கேட்டுக்கொண்டிருந்தேன் நான்; இப்பொழுது உங்களுக்குக் கூறினேன். நீங்கள் துஷ்டர்களுக்கு இடங்கொடுக்காதிருப்பீர்களாக.

பாலவிநோதினி.

பிள்ளைகளின் தவம்.

1. தாய், தந்தை, ஆசிரியன்—இவர்கள் விருப்பமறிந்து நடந்து அவர்களை மகிழ்விப்பதே பிள்ளைகளின் கடமையாம். அவர்கள் மனமகிழ்ச்சியோடிருந்தால் மக்களுக்கு எல்லா நன்மைகளுமுண்டாகும்—இந்தப் பணிவிடைதான் பிள்ளைகள் செய்யவேண்டிய தவம்.

அத்திரியின் ஆராய்ச்சி மணி.

முன்னொரு காலத்தில் அத்திரி யென்னும் பட்டணத்தில் ஜீயவண்ணன் என்னும் அரசன் செங்கோல் செலுத்திவந்தான். இவன் தன் நாட்டில் உள்ள பிரஜைகளின் குறைகளைத் தீர விசாரித்து அவர்களுக்கு நன்மைசெய்ய வேண்டும் என்னும் நல்ல எண்ணமுடையவன். அரசனுக்குத்தான் இந்த நல்ல எண்ணமிருந்தது. அவன் சிப்பந்திகளுக்கு அது இல்லை. தங்கள் சௌகரியப்படி அவர்கள் எந்த விவகாரங்களையும் தீர்மானஞ் செய்வார்கள். சில சமயங்களில் இவர்களுடைய முயற்சிக் குறைவால் திருடியவன் தப்பித்துக்கொள்வான், பொருளிழந்தவன் தண்டிக்கப்படுவான், கொலை செய்தவன் கூத்தாடித் திரிவான்; அப்பாவி யொருவன் ஆவியிழப்பான். இப்படித் தன் நாட்டில் அநியாயம் நடப்பதை அறிந்த அரசன், ஒவ்வோரிடத்திலும் ஒவ்வொரு நியாயாதிபதியை நியமிப்பதைவிட ஒரு பெரிய சபை கூட்டி அதன் மூலமாய்த் தீர்ப்புப் பிறக்கச் செய்யவேண்டுமென்று தீர்மானம் பண்ணினான். இதுவல்லாமல் மற்றொரு குறையும், இதர நாடுகளில் இன்னும் இருப்பதுபோல, இந்த அத்திரிப் பட்டணத்திலும் இருந்தது. அந்தக் குறை யென்னவென்றால் ஜனங்கள் கொண்டுபோகும் வியாஜ்யங்களை அவர்கள் ஏழைகளாகவாவது விரோதிகளாகவாவது இருந்தால் நியாயாதிபதிகளாய் இருப்பவர்கள் கவனிக்கமாட்டார்கள். இந்த அக்கிரமத்தை அடக்க எண்ணிய மன்னன் இதற்குமொரு தந்திரம் செய்தான். பெரிய மணியொன்று செய்து அதைச் சந்தைகூடுமிடத்தில் உயரக்கட்டித் தூக்கிவிட்டு, தானே தன் பரிவாரங்கள் சூழ நகர் எங்குஞ் சுற்றிப் போய் "யாருக்கு

என்ன குறை இருந்தாலும் நமது சந்தைச் சதுரத்தில் கட்டிய ஆராய்ச்சி மணியை ஆட்டினால் அவர்கள் குறை விசாரிக்கப்பட்டு நியாயத்தீர்ப்பு நிச்சயமாய்ப் பிறக்கும்'' என்பதாக விளம்பரஞ் செய்வித்தான்; பின் அதற்கென்று ஒரு சபையை அமைத்தான்; மணிச்சத்தம் கேட்டதும் அவ்விடத்திற்குச் சபையோரனைவரும் வந்து குறையைக் கேட்டு நியாயம் சொல்லவேண்டுமென்று உத்தரவு செய்தான். அது முதற்கொண்டு நகரமாந்தர் எல்லோரும் அவ்வாறே செய்து குறை நீங்கி நன்மையடைந்து வந்தார்கள்.

---

1. குற்றம் எது?—

“ இளமைப் பருவத்துக் கல்லாமை குற்றம் ”—
(நான் மணிக்கடிகை)

2. மெய்ப்பொருள் எது?—

“ கைப்பொருடன்னின் மெய்ப்பொருள் கல்வி ”—
(கொன்றைவேந்தன்.)

3. ஒரு தேசத்தை அல்லது ஒருவரை 1. உயர்த்துவதெது?
,, ,, ,, 2. பலப்படுத்துவதெது?
ஒரு தேசத்திற்கு அல்லது ஒருவர்க்கு 3. மகத்துவமுண்டாக்குவதெது?
,, ,, ,, 4. அதிகாரத்தைத் தருவதெது?
,, ,, ,, 5. செல்வமுண்டாக்குவதெது?
,, ,, ,, 6. பிறருடைய அபிமானமுண்டாக்குவதெது?
,, ,, ,, 7. பிறரைக் கீழ்ப்படியும்படி செய்வதெது?
,, ,, ,, 8. மேன்மை பெறுவதற்கு மூலாதாரமாவதெது?

குலப் பெருமையா? அல்ல; நாகரிகமா?—அல்ல—புத்தி விவேகங்களின் திறமை மாத்திரமா? அல்ல; அல்ல.
பின்னென்ன?—நல்ல நடத்தையே!

இப்படி நாட்கள் பல போயின; மாதங்கள் பல சென்றன; வருஷங்களும் கழிந்தன. மணியை இழுத்து இழுத்துக் கயிறும் இற்றுப்போனது. அதனுடைய முனை பிரிந்து பஞ்சாய்ப் பறந்துபோயிற்று. அதைச் சிலர் பழுதுபார்த்துச் செம்மை செய்தார்கள். அதுவும் பயனற்றுப் போயிற்று. அதற்கப்புறம், மணியை யடிக்க, அடிக்கடி அவசியம் ஏற்படாத காரணத்தால் மணியின் கயிற்றைக் கவனிக்காமலே விட்டுவிட்டார்கள். ஒருநாள் ஒருவன் பச்சிலைக்கொடி யொன்றை அந்த மணிக்கயிற்றோடு முடியிட்டுக் கட்டிவிட்டிருந்தான். அம்மன் கோவிலில் பச்சிலைத் தோரணம் போல அது தொங்கிக்கொண்டிருந்தது.

அவ்வூரில் ஒரு போர்வீரனிருந்தான். அவன் குதிரையே குலதெய்வமென அதன் மேலேறி எப்பொழுதும் சுற்றிக் கொண்டிருப்பான்; காடுகளுக்குப் போவான்; கடம்பை, கரடி, காட்டானை முதலியவைகளைக் கொல்லுவான்; வேங்கை, சிறுத்தை முதலிய துஷ்ட மிருகங்களை வலைபோட்டுப் பிடிப்பான். இப்படித்தான் அவன் காலங்கழிப்பது. அவனிடத்தில் வேடர்கள் பலர் இருந்தனர். அநேக குதிரைகளும், நாய்களும் இருந்தன. வேட்டையாடுவதற்குப் பெரு வலை, சிறு வலை, வளைத்தடி, வாள், வேல், வில் முதலியவைகளும் கணக்கில்லாமல் அவனிடமிருந்தன. வேட்டைக்காகவேண்டியமட்டும் பணச்செலவு செய்வான். இப்படி யிருந்த இந்தப் போர்வீரன் தனது கிழப்பருவத்தில் வேட்டைமேல் இருந்த விருப்பத்தையெல்லாம் விட்டுவிட்டு, பணஞ்சேர்க்க வேண்டுமென்று ஆசைகொண்டான். பணத்தையே பகவானாகப் பணிந்து வந்தான். வீண் செலவெல்லாம் நின்றது. அவசியமான செலவையும் அவன் செய்வதில்லை. தன்னுடைய சிங்கார மாளிகைகளை வாடகைக்கு

விட்டுவிட்டான்; குதிரைகளையும், நாய்களையும் விற்றுவிட்டான்; ஒரு குதிரையை மாத்திரம் தன்னிடம் வைத்துக்கொண்டு ஒரு சிறு குச்சுவீட்டில் குடியிருந்து வந்தான். சில நாட்களுக்குப் பின்பு அந்த ஒரு குதிரைக்கும் ஏன் வீணாகத் தீனி போட்டு வீட்டில் கட்டிவைத்திருக்க வேண்டுமென்று எண்ணி அதை வெளியில் விரட்டிவிட்டான். ஊர்ப்புறத்தில் மேய்ந்துகொண்டிருந்தால் வேண்டியபோது பிடித்துக்கொண்டு வரலாம் என்பது அவன் எண்ணம்.

அந்தக் குதிரை அவனிடத்தில் செல்வமாக வளர்ந்ததோடு அவனை அல்லும் பகலும் அவன் குறிப்பறிந்து சுமந்து திரிந்தது.—இப்பொழுது அதுவும் வயது அதிகமாகித் தளர்ச்சியடைந்து இளைத்திருந்தது. அதற்கு இப்பொழுதும் நல்ல தீனி போட்டு அதைப் பாதுகாப்பது போர்வீரனுடைய கடமையல்லவா?—இருந்தும் பணத்தாசையால் அவன் அப்படிச் செய்யாமல் அதை வெளியில் துரத்திவிட்டான். அது பாவம் ஆதரிப்பாரில்லாமல் தனியே வீதி வீதியாய்த் திரிந்துகொண்டிருந்தது. ஒண்ட நிழல் இல்லாமலும், குடிக்க நீரில்லாமலும், தின்னப் புல்லில்லாமலும், போன இடந்தோறும் மனிதர்கள் துரத்தவும், நாய்கள் கடிக்கவும், முள்ளாலும், தூறாலும் உடம்பு கிழிந்து இரத்தம் வடியவும் வருந்திக்கொண்டிருந்தது.

ஆராய்ச்சிமணிக் கயிற்றில் ஒருவன் பச்சிலைக் கொடியொன்றைக் கட்டித் தொங்கவிட்டான் என்று முன்பு சொல்லியிருக்கிறோம் அல்லவா? அன்றைக்கு இந்தக் குதிரை சந்தைக்கடையில் சருகாகிலும் கிடைக்குமென்று சென்றது. அங்கிருந்த மணிக்கூட்டில் தொங்கும் பச்சிலையைப் பார்த்ததும் விரைந்து சென்று அந்தக் கொடியைப் பற்றி யிழுத்து, பச்சிலையைத் தின்ன ஆரம்பித்தது. கொடி

யை யிழுக்கவும் ஓயாமல் அடிக்கும் மணிச்சத்தம் ஊரெங்கும் கேட்டது. மணியோசையைக் கேட்ட பஞ்சாயத்தாரும், ஜனங்களும் அதிசயப்பட்டு என்ன விசேஷம் என்று அறிந்துவரச் சந்தைப்பேட்டைக்கு ஓடினார்கள். அங்கு எல்லாவற்றையும் தின்றுவிட்டுக் கொடியைப் பற்றி மென்றுகொண்டிருக்கும் குதிரையைப் பஞ்சாயத்தார்களும், ஜனங்களும் பார்த்தார்கள். "இது அத்திரிவீரன் குதிரையாச்சுதே! இதற்கு என்ன தீங்கு நேரிட்டதோ! வாயில்லாப் பிராணியென்றாலும் வழக்குவந்த காலத்தில் உண்மை தெரிந்து தீர்ப்புச் சொல்லவேண்டு" மென்று அங்கு வந்திருந்த ஜனங்களைக் குதிரை சம்பந்தமாக ஏதேனும் தெரியுமா வென்று விசாரித்தார்கள். அங்கிருந்தவர்கள் எல்லோரும் வீரன்செய்த அக்கிரமத்தைப் பஞ்சாயத்தாரிடம் சொன்னார்கள். அவர்கள் அவ்வீரனை அழைத்து விசாரிக்க அவன் "என் குதிரையை நான் என்ன செய்தாலும் செய்வேன். உங்களுக்கென்ன"? என்று மிகவும் கோபமாகப் பதில் சொன்னான்.

பஞ்சாயத்தார் இராஜாவின் விளம்பரத்தை அவனுக்குத் தெளிவாக வாசித்துக் காட்டி, "கர்வத்தால் தலைகால் தெரியாமல் தருக்கியிருப்பவன் சீக்கிரத்தில் சிறுமைப்பட்டு மற்றவர்களைக் கெஞ்சிப் பிழைக்குங் கதிக்கு வந்துவிடுவான். கர்வத்துடன் குதிரைமேல் குதூகலங்கொண்டு பானவன் பின்னொருகாலத்தில் நடக்கமாட்டாமல் நடந்துவந்து கூசிக் குனிந்து கும்பிட்டுப் பிழைப்பதும் உண்டு. வ்வொருவனும் புகழோடு இருக்கவேண்டும். புகழ் என்ற வீரம் என்னும் பூவின் வாசனையாகும். இரக்கமில்லானை வீரன் என்று சொல்ல முடியாது. இரக்கந்தான் ளின் விசேஷ குணம், என்பதை நீ கேட்டதுமில்லை

யோ? இந்த வாயில்லாப் பிராணியைப் பட்டினிபோட்டுக் கொல்லுவதால் உனக்கு வரும் புகழ் என்ன? கண்ணியம் என்ன? பெருமை என்ன? நல்ல காரியத்தைச் செய்தவன் ஊமையாயிருந்தாலும் அவனை ஊரெங்கும் புகழ்வார்களே. நீ செய்தது பாதகமாகையால் இனி அரைவிநாடி தாமதிக்காமல் இந்தக் குதிரையைக் கூட்டிச்சென்று புல், கொள் முதலியன தவருமல் வைத்துக் காப்பாற்றி வரவேண்டும். இல்லாவிட்டால் உன் சகல சொத்துக்களையும் பறித்து இராஜாங்கத்தார் மிருகங்களையும், ஏழைகளையும் காப்பாற்றச் செலவிடுவார்கள்'' என்று தீர்ப்புச் சொன்னார்கள்.

போர்வீரன் வெட்கமடைந்து பணத்தைக் காத்துவந்ததால் வந்த அவமானத்தை எண்ணி யெண்ணித் துக்கித்து குதிரையைக் கூட்டிக்கொண்டுபோனான். இதைக்கேட்ட அரசனும் மிகவும் சந்தோஷமடைந்து "என் ஆராய்ச்சி மணி வாயில்லாப் பிராணிகளுக்கும் நியாயத்தீர்ப்புச் சொல்ல நிற்பதைக் காண நான் பெருமைப்படுகிறேன்'' என்றான்.

நீதி

(1) பதறி ஒன்றையும் செய்யாதே—ஒன்றைச்செய்யும் போது மலைப்புண்டானல் சற்று நிதானி. நிதானத்தால் எல்லாம் மலையின்மேல் வைத்த விளக்கைப்போல் விளங்கும். அப்பொழுது உன் அறிவு உனக்கு "இந்தவிதம் செய்; சித்தி பெறுவாய்'' என்று உணர்த்தும். உணர்ந்து அவ்வழியிலிருந்து ஊக்கத்தோடு உழை. உழைக்கப் பின் வாங்காதே! உழைப்பின் பயன் பெரிதாகும். பிறகு எல்லா நலமும் பெறுவாய்.

சண்டிகை ஸாதுவான கதை.

துவாபர யுகத்தில் ஒரு காலத்தில் சண்ட கௌசிகரென்னும் ஒரு முனிவர் ஒரு வனத்தில் ஆசிரம மேற்படுத்திக்கொண்டு அங்கே தவம் பண்ணிக் கொண்டிருந்தார். அந்த முனிவருக்கு உத்தாலகனென்னும் ஒரு மாணவனிருந்தான். ஒரு நாள் அந்த முனிவர் இன்னும் சில முனிவர்களுடன் சேர்ந்து தீர்த்தயாத்திரை செய்யப் புறப்பட்டார். அப்பொழுது உத்தாலகனென்னும் சிஷ்யனும் அம்முனிவருடன் புறப்பட்டுப் போனான். கொஞ்சதூரம் போனதும் சண்டகவுசிகரென்னும் முனிவர் உத்தாலகனைப் பார்த்து "அப்பா நீ எங்களுடன் வருவது தகுதியல்ல. ஆகையால் நீ உத்தம ஸ்திரீயை அக்னி சாட்சியாக விவாகம் செய்துகொண்டு அவளுடன் மனமொத்துச் சுகமாக வாழ்ந்திரு. நான் தீர்த்தயாத்திரை போய் வருகிறேன்'' என்றார்.

அது கேட்ட உத்தாலகன் "அடியேன் தேவரீரை விட்டு அரைக்ஷணமும் பிரிந்திரேன். தாங்கள் அடியேனைத் தனியேவிட்டுப் போகலாகாது. வேறு திக்கில்லேன். மனமகிழ்ந்து கூடவே அழைத்துப் போகவேண்டும்'' என்றான். முனிவர் "அப்பா பிரமசரியம், கிரஹஸ்தம், வானப்பிரஸ்தம், ஸந்நியாசம் என்று சொல்லப்பட்ட நான்குவகை யாசிரமங்களுள் கிரஹஸ்தாசிரமமே சிலாக்கியம். அதுவே எல்லா ஆசிரமத்திற்கும் ஆதாரமானதும் சுலபமானதுமாகும். ஆகையால் நீ என் பேச்சைத் தட்டாமல் ஒரு பெண்ணை மணஞ் செய்துகொண்டு எல்லாவற்றிலும் மேன்மையான இல்லறதர்மம் நடத்திவா'' என்று தம் சிஷ்யன் மனமொப்பும்படி விளக்கிக்காட்டி அவ்வூரிலிருந்த சண்

டிகை என்னும் ஒரு பெண்ணைப் பேசி அவனுக்கு விவாகம் நடத்தி அவனை அவ்வூரிலேயே இருக்கும்படி செய்துவிட்டு மற்ற முனிவர்களுடன் தீர்த்த யாத்திரை போய்விட்டார்.

பின்பு அந்த உத்தாலகனும் அவன் மனைவி சண்டிகையும் அவ்வூரிலேயே ஒரு வீட்டிற் குடியிருந்து வந்தார்கள். அந்தச் சண்டிகை தன் பெயருக் கொத்தபடி வாழ்நாளையில் புருஷனோடு சண்டித்தனம் செய்யப் புறப்பட்டு விட்டாள். அதெப்படியெனில், அந்தப் பிராமணன் அக்னி ஹோத்திரஞ்செய்ய அக்னி கொண்டுவா வென்றால் வீட்டில் அடுப்பிலுள்ள அக்னியைத் தண்ணீர் வார்த்து அவித்து விட்டு அக்னி ஜாடாரக்னி தானென்பாள். ஸந்தியாவந்தனம் செய்ய ஜலம்கொண்டுவாவென்றால் வீட்டில் அண்டா கொப்பரையிலிருக்கும் ஜலமுழுவதையும் ஒரு துளியில்லாமல் தலைகீழாகக் கவிழ்த்துவிட்டு ஜலம் அருணஜலந்தா னென்பாள். இன்றைக்குச் சீக்கிரமாக வெளியேபோகவேண்டும்

முயற்சியும் சோம்பலும்.

உழைப்பும் முயற்சியு மில்லாமல் ஒருகாரியத்தையும் முடித்தற்கியலாது. ஆகையினால் நீ தொடங்கும் காரியத்தில் கண்ணாயிருந்து முயற்சியை அதனிடத்திலே வைத்து இடையூறு நேரின் அதனைப் பொருட்படுத்தாமலிருந்துவரப் பழகு. காரியசித்தியாம்.

முயற்சி உனக்கு ஈசனுடைய திருவருட் செல்வத்தைக் கூட்டுவிக்குந்துணை. அதுதான் உன்னை எந்தக்காலத்திலும் ஆதரிக்கும். முயற்சியில்லாத சோம்பேறிக்கு ஈசன் கருணை செய்யான்; அவனிடம் கோபமே கொள்வான். சோம்ப ரேன்பவர் தேம்பித்திரிவர் என்ற பெரியோர் வாக்கிற்கிணங்கச் சோம்பேறிக்குக் கேடே சம்பவிக்கும்.

சமையல் சீக்கிரம்செய் என்று சொன்னால் அடுப்பைப்புறக்கடைக் கிணற்றில் போட்டு விட்டு முக்காடிட்டுப் படுத்துக்கொண்டிருந்து அந்தச் சமையத்தில் பிண்டம் பெருங்காயம் தானென்று கையை விரிப்பாள். இன்றைக்கு அமாவாசையாகையால் வீடுவாசல்களைச் சுத்தி செய்து விட்டு ஸ்நானம் செய்து மடியோடிருந்து சமையல் செய் என்றால் அவளுடைய முப்பாட்டன் காலத்தில் தண்ணீரைக் கண்ட ஒரு பழம் கந்தலை இடுப்பில் உடுத்துக்கொண்டும் வீடுவாசல்களைக் குப்பை போகவிளக்காமலு மிருப்பாள். விருந்து வந்திருக்கிறதுசமையல்செய்யென்றால்தலைவலிக்கிறதென்று படுத்துறங்கப் போய்விடுவாள். இப்படியாக எட்டிக்குப் போட்டி செய்து வந்தாள். இதனால் அந்த உத்தாலகனுக்கு மிக மனவருத்த முண்டாய், "ஐயோ! கிரகஸ்தாசிரமத்தில் மிகச் சுகமுண்டென்றும் அந்த ஆசிரமமே மற்றெந்த ஆசிரமத்திற்கும் ஆதாரமானதென்றும் முனி புங்கவர் நமக்குப் போதித்தனரே! சண்டிகை என்னும் இந்தப் பாவி

முயற்சியைப்பற்றிய பழமொழிகள்.

1. ஒரு குண்டில் கோட்டை பிடிக்கலாமா?
2. இளமையின் முயற்சி முதுமையிற் காக்கும்.
3. இளமையிற் சோம்பல் முதுமையில் மிடிமை (தரித்ரம்)
4. ஊக்கமுடைமை ஆக்கத்திற் கழகு
5. ஊழிபேரினும் ஊக்கமது கைவிடேல்.
6. நடந்தவன் காலில்லக்ஷ்மீதேவி! இருந்தவன் காலில்மூதேவி!
7. நடந்தால் நாடெல்லாமுறவு படுத்தால் பாயும் பகை.
8. முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்.
9. வருந்தினால் வாராததொன்றுமில்லை.
10. முயற்சி திருவினையாக்கும்.

சகசண்டியோடு கூடி வாழ்ந்து இல்லறத்தை எந்த விதம் நடத்துவது? சீ! இதுகொடியது.

"பர்த்தாவுக் கேற்ற பதிவிரதை யுண்டானால்
எத்தாலுங் கூடி வாழலாம்—சற்றேனும்
ஏறுமாறாக இருப்பாளே யாமாகில்
கூறாமற் சன்னியாசங் கொள்"

என்று கூறியுள்ளாரே, அது உண்மைதான். இந்தப் பிசாசைக்கட்டிக்கொண்டு யார் அழுவது? ஸந்நியாசங் கொள்வதே மேல்" என்று கருத்திலெண்ணிக்கொண்டு சமையம் பார்த்திருந்தான்.

தீர்த்தயாத்திரை போன முனிவர் திரும்பி வந்துவிட்டார். வந்ததும் அவரைக்கண்டு நமஸ்காரம் செய்து "தேவரீர் தனிக்காட்டு ராஜாவைப்போல் ஒருகவலையுமின்றியிருந்து வந்த அடியேனுக்கு ஒருகால் கட்டு கட்டினதுமகத்தான பாதகங்களுக்கும் இடர்களுக்கும் ஏதுவாக முடிந்ததே" என்று கூறிச் சண்டிகை செய்யும் எட்டிக்குப் போட்டியானசெய்கைகளைத்தெரிவித்து இதற்குவழியென்ன சொல்லுகிறீர்" என்று மனம் நொந்து தெரிவித்தான். அதற்கு அம்முனிவர் "அப்பா! இனி நீ உன் வீட்டுக்குப் போனதும் உன் மனைவியிடம் எது செய்யவேண்டுமோ அதைச்செய்ய வேண்டாமென்று மாற்றிச் சொல்லும்! அப்பொழுது உன் மனைவி உன் எண்ணத்தைப்போல் முடித்து வைப்பாள். இந்தத் தந்திரத்தை அனுசரித்துவா" என்று சொல்லியனுப்பினார். அந்த பிராமணன் உத்தாலகனும் அப்படியே தனக்குநடைபெறவேண்டியவற்றைப் பற்றி சொல்லித் தன் காரியத்தைச் சித்திசெய்துகொண்டு வந்தான்.

அக்காலத்தில் ஒருநாள் அவன் தந்தைக்கு சிராத்தம் வந்தது. அதைக்கண்டு அவன் தன் மனைவியை அழைத்து

"அடியே இன்றைக்கு அப்பாவுக்குச் சிராத்தம் வருகிறது. நாமதற்கு என்ன செய்யப் போகிறோம்; ஒன்றும் செய்ய வேண்டாம்; வீண் சிரமப் படாதே" என்றான். அது கேட்ட சண்டிகை "நன்றாயிருக்கு, அப்பா தெவசத்தை விடுவாரோ, ஊரார் சிரிப்பாளே, ஜாதிப் பிரஷ்டம் செய்வாளே, நீங்கள் சொல்லறது வேடிக்கையா யன்றோ யிருக்கு, உங்களுக்கு இந்தப்புத்தி யார் சொன்னது; விழுந்து விழுந்து ஜபதபம் பண்ணுகிறீரே, பண்ணிப் பிரயோஜனமென்ன! தெவசமிடாதிருப்பாரோ செய்யத்தான்வேணும்" என்று சொல்லி, பக்திசிரத்தையாக ஸ்நானம் செய்து வீடு வாசல் மெழுகி மடிகட்டிக்கொண்டு சகல பதார்த்தங்களையும் வெகு நன்றாய்ச் சமைத்து பிராமணர்களுக்குப் போட்டு அவர்களைத் திருப்தி பண்ணிவைத்தாள். திதி முடிந்தபின் உத்தாலகன் தன் மனைவியையழைத்து "அடியே! சண்டிகை! இந்தப் பிண்டப்பிரதானத்தை யெடுத்துக் கங்கையாற்றில் கொட்டிவிடு, நாய் நரிகள் தின்னலாகாது" என்றான். அவள் உடனே தன் வழக்கப்படி அப்பிண்டப் பிரதானத்தை யெடுத்து நாயிருக்குமிடந் தேடித் தெருவில் குப்பை மேட்டில் கொட்டிவிட்டுவந்தாள். அதைக்கண்டதும் உத்தாலகன் "ஐயோ! பாவி சண்டாளி வீணே சிராத்த நஷ்டமுண்டாக்கினையே துரோகி" என்று கோபித்து அவளைக் குத்துக் கல்லாகப் போகும்படி சபித்தான். அவள் உடனே "ஐயையோ நானென்னசெய்வேன். அறியாமற் செய்தேன். பிழை பொறுக்கவேண்டும். இச்சாபம் விமோசனமாக வழி பிறப்பிக்க வேண்டும்" என்று மிகவும் பிரார்த்தித்தாள். அதைக்கண்ட உத்தாலகன் மனமிரங்கி "அடிபெண்ணே! இந்த வாழியாக அர்ஜுனன் அசுவமேதக்குதிரையோடுவருவான். அந்தக்குதிரையானது குத்துக்கல்லாகிய உன்மேல்

வந்து உறும். அப்போது அக்குதிரை கல்லோடு ஒட்டிக்கொள்ளும்; அதைக்கண்டு அர்ஜுனன் குதிரையண்டை வந்து குத்துக்கல்லாகிய உன்னைத்தொடுவான். அப்பொழுது நீ ஸ்திரீரூபம் பெறுவாய். பின்பு என்னிடம் வந்துசேர்" என்று கட்டளையிட்டான். அவன் சபித்தவாறே சண்டிகை கல்லாகி வெகுநாள் வரையிலிருந்தாள். பின்பு அர்ஜுனன் அவ்விடம் வரும்போது அவன் குதிரை அக்கல்லில் ஒட்டிக்கொண்டது. அதை விடுவிக்கும் நிமித்தம் அர்ஜுனன் அக்கல்லண்டைவந்து கல்லைத் தன் கையால் தொட்டான். அர்ஜுனன் கைபட்டதும் சண்டிகை தன் சுயரூபம் பெற்றுத் தன் புருஷனை யடைந்து நற்குண முடையவளாய் வாழ்ந்திருந்தாள்.

கொடை.

1. நூற்றிலொருவன் சூரனாவான்; ஆயிரத்திலொருவன் பண்டிதனாவான்; பதினாயிரத்திலொருவன் பிரசங்கியாவான்; ஆனால் தன் கையிலுள்ளதை ஒளியாமல் இல்லையென்று கேட்பவர்களுக்குக் கொடுக்குந் தன்மையுடைய கொடையாளி உண்டாவானோ உண்டாகமாட்டானோ தெரியாது.

2. கொடையாளி கடையனாயினும் அவன் சேவிக்கத் தக்கவனேயாவன். உலுத்தன் மஹாராஜனாயினும் ஸேவிக்கத் தக்கவனல்லன். நீரை விரும்பியவன் கடலை நோக்கிச் செல்வதுண்டா? கிணற்றையன்றோ?

3. தன்னை வந்து பிறர் ஒன்றில்லை, தாவென்று கேட்கும்போது "இன்று நாமிவ்வேழைக்குக் கொடுக்கும்படியான பாக்யம் நமக்கிருந்ததே" என்று மகிழ்கின்றவனைப் பார்த்தாலும் பிறர் கூறக் கேட்டாலும் நன்மையுண்டாம்.

உலுத்த குண விசேஷம்.

ஓர் ஊரில் ஒரு பெரிய உத்தியோகஸ்தனிருந்தான். அவன் மனைவி பரமலோபி! அந்த உத்தியோகஸ்தனும் அவளுடைய குணத்திற் கிணங்கியே நடக்கவேண்டியவனாய் விட்டான். இப்படியிருக்கையில் ஒரு சமயம் உத்தியோகஸ்தனுக்கு, நல்ல உடுப்புத் தைத்துக்கொள்ளவேண்டிய அவசியம் நேரிட்டது. அதனால் அவன் தன் மனைவியிடம் போய் "அடுத்தவாரம் கவர்னர் ஜனரல் வருகின்றார். அன்றைக்கு நான் அவருடைய பேட்டி காண உடுப்புத்தைக்க வேண்டும். ரூபா நூற்றைம்ப திருந்தாற் போதும்! சாயந்திரம் நான் கடைக்குப் போய் வாங்கியாக வேண்டும்" என்றான்.

மனைவி.—இது வேறு வரியா இந்த மாதத்தில்! தாய் தகப்பனார் சிராத்தத்திற்குத் தான் தொலைத்தேன்! "நன்றாயிருக்கிறது நியாயம் புடவையிலிருக்கிறது சாயம்" பேஷ்! உடுப்புக்கு நூற்றைம்பது ரூபா!—என்றாளாம்.

உத்தியோகஸ்தன்.—எது அவச்யமோ அதை வாங்கித்தானே ஆகவேண்டும்! விஷயந் தெரியாமல் கத்துகின்றாயே!—கவர்னர் ஜெனரல் என்றால் யார்? உங்கள் வீட்டுச் சிவகாமிப் பாட்டியோ! சிவகாமிப் பாட்டியைப்பார்க்கப்போகும்போது கூடவல்லவா நீ கொரநாட்டுக் கொட்டடிப்புடவை கட்டிக்கொண்டுபோனாய்! 750 ரூபாசம்பளமுள்ள ஒரு உத்தியோகஸ்தன் 21,000 ரூபா சம்பளமுள்ள ஒருவரைப் பார்க்கப் போகும்போது எப்படிப்பட்ட உடையுடன் போகவேண்டும் என்பதைக் கவனித்தாயா? முழுவதும் பட்டாகவல்லவா இருக்கவேண்டும்! நான் உன் வாய்க்குப் பயந்துகொண்டு ரூபா நூற்றைம்பது வேண்டுமென்றேன்! இதற்குப் பிரமாதப்படுத்துகின்றாய் நீ!

மனைவி.—நீங்கள் டம்பமாய்ப்போய்ப் பார்த்தால் இவன் பணக்கொழுப்புடையவன் என்று அவர் நினைத்து விடுவார்; ஆகையினால் நீங்கள் சாதாரண உடுப்பே போட்டுக் கொண்டு போங்கள் போதும்.

உத்தியோகஸ்தன்.—அசடே தெரியாமல் உளறுகிறாயே! சாதாரண உடையுடன் போனால் சேவகர்கள் முதலில் உள்ளே விடமாட்டார்கள். அப்படி உள்ளே விட்டாலும் கவர்னர் ஜனரல் கண்டதும் வெளியே தள்ளும்படி உத்தரவிடுவார். ஆகையினால் நல்ல உடுப்பு தைத்துத்தானாக வேண்டும். நல்ல உடுப்போடு போய்ப் பார்த்தால் அவர் என்னோடு பேசுவார்; பிறகு சம்பளமுயரவுங் கூடும்; இந்தக் காலத்திலெல்லாம் துணியிலேதானிருக்கிறது சூட்சுமம்! துணியில்லாதவன் கால் மனிதன்! நீ வீட்டில் கஞ்சியைக் குடி, அதை யார் கண்டவர்கள்! உடுப்புமட்டும் சரியாயிருந்தால், உலகத்தையே வெல்லலாம்.—

இப்படிச் சொன்னவுடன் மனைவியின் மனதில் கொஞ்சம் இரக்கமுண்டாயிற்று. உடனே அவள், புன்சிரிப்புடன், "நீங்கள் எப்படியாவது உங்கள் எண்ணத்தைச் சாதித்து விடுவீர்கள்! நான் வீணே அடித்துக்கொள்கின்றேனே அதுதான் பயன்!" என்று கூறி எழுந்து உள்ளேபோய்ப் பெட்டியைத் திறந்து, நூறு ரூபா நோட்டொன்று ஐம்பது ரூபா நோட்டொன்று எடுத்துக்கொண்டு வெகு வேகமாய் வந்து "இந்தாருங்கள் நூற்றைம்பது! போய் நல்ல பட்டுத்துணியாய்ப் பார்த்து வாங்கிவந்து என்னிடம் காட்ட வேண்டும்! பிறகுதான் தையற்காரனிடம் கொடுக்கவேண்டும்" என்று உத்தரவு கொடுத்தாள். உத்தியோகஸ்தன் தான் அன்று நரிமுகத்திலே விழித்ததாய் எண்ணிச் சந்தோஷமடைந்து உடனே புறப்பட்டுக் கடைவீதிக்குச் சென்றான்.

கடைவீதி நெடுகலுஞ் சுற்றிக் கடைசியில் ஒரு கடையில் நுழைந்து வெண்பட்டுத் துணி வாங்கிக்கொண்டு வீடுவந்து தன் மனைவியிடம் காட்டினான். மனைவி பார்த்து, "உங்கள் உடம்புக்கு இது நன்றாயிருக்கும்? கறுப்புத் துணி வாங்கிவந்து விடப்போகிறீர்களே என்று எண்ணியிருந்தேன்! இந்தமட்டுந் தெரிந்ததே! என்றைக்குத் தையற்காரனிடம் கொடுப்பதினை?" என்று கேட்டாள்.

உத்தியோகஸ்தன், "நாளைக்காலையில் உதயத்துக்கெல் ம் தையற்காரன் வீட்டுக்குப் போய்க் கொடுத்துவிட்டு வேண்டும்! அப்பொழுதுதான் அவன் சமயத்துக்குத் ருவான்" என்றான்.

மனைவி, "சரி அப்படியே செய்வோம்! நானும் தையற்காரன் வீட்டுக்கு வருவேன்! தையற்காரன் துணியை எடுத்துக்கொண்டுவிடுவான்! அளவு பார்த்து வேண்டியதைக் கொடுத்துவிட்டு மீதியைக் கொண்டுவந்து விட வேண்டும்" என்றாள்.

உத்தியோகஸ்தன், "சரி, நீயும் வா! வந்து உன் இஷ்டப்படி செய்" என்றான்.

பிறகு மறுநாள் காலையில் உத்தியோகஸ்தன் தன் வீட்டுக் குதிரைவண்டியில் மனைவியுடன் புறப்பட்டுத் தையற்காரன் வீட்டுக்குப்போய் அவனை யெழுப்பித் துணியைக் காட்டி, "என் அளவுக்கு வேண்டிய துணியை யெடுத்துக்கொள்" என்றான்.

தையற்காரன் உடனே தன்னுடைய கத்தரிக்கோலையும் அளவுடேப்பையும் எடுத்துக்கொண்டு வந்து உட்கார்ந்து துணியை வாங்கிக்கொண்டான்; பிறகு எழுந்து தன் வழக்கப்படி அவரை அளந்தான். பிறகு உட்கார்ந்துகொண்டு துணியைக் கத்தரித்துக் கிழிக்கத் தொடங்கினான்;

துணிதுண்டு துண்டாய்க் கிழிவதைக் கண்ட உத்தியோகஸ்தன் மனைவி, தேம்பித் தேம்பி அழத் தொடங்கிப் பிறகு "ஐயோ! நிறுத்து! நிறுத்து!! நீ உடுப்பு தைத்தது போதும்! ரூபா நூற்றைம்பதல்லவா கொட்டிக் கொடுத்தேன்! அட பாவி இப்படி துணியைச் சின்னா பின்னப் படுத்துகின்றாயே! இது என்ன சீட்டித்துணியா உன் இஷ்டப்படி செய்ய" என்று கூறிக்கொண்டே தையற்காரனுடைய கையைச் செட்டியாய்ப் பிடித்துக்கொண்டுவிட்டாள். உத்தியோகஸ்தன் தன்னாலியன்றவரையில் நியாயஞ் சொல்லிப்பார்த்தான். முடியவில்லை. தையற்காரனும் தன்னாலியன்றவரையில் நியாயஞ் சொன்னான். ஒன்றும் முடியவில்லை. ஊர் கூடிவிட்டது!—பிறகென்ன செய்வது!—லோபிக்கும் லோபியை அநுஸரித்து நடப்பவர்களுக்கும் இப்படிப்பட்ட புத்தியுண்டாவது இயல்புதான்!—என்று பலர் பேசிக்கொண்டே அவ்விடம் விட்டகன்றனர். நானும் "இந்தக் கூட்டத்தில் நமக்கென்ன வேலை! இது லோப குணத்தின் பயனென்பது தெரிந்துகொண்டோம்"—என்றெண்ணியபடியே அங்கிருந்து விலகிவிட்டேன்!—இது சென்ற மாதத்துப் புதுமை!

பாலவிநோதினி.

நல்ல நடத்தையுடையவனது இலக்ஷணம்.

1. நல்ல நடத்தையுடையவன் எப்போதும் மரியாதையாகவும் யோசனையோடும் பேசுவான். அவன் அற்ப ஸந்தோஷத்திற்கு இடங் கொடுக்கமாட்டான்; தன் அந்தஸ்தைக் காப்பாற்றிக்கொள்வான். சில சமயம் அவன் தன் மனதின் போக்கில் பேசினாலும் பிறருக்கு வருத்தமுண்டாகும்படி பேசவே மாட்டான். அவனுடைய குரல் இனிமையாக இருக்கும்.

மனிதனின் வாழ்வு.

விருத்தம்.

"ஆவீன மழை பொழிய இல்லம் வீழ
அகமுடையாள் மெய்ந்நோவ அடிமை சாவ
மாவீரம் போகுதென்று விதைகொண்டோட
வழியிலே கடன்காரர் மறித்துக் கொள்ளக்
கோவேந்தர் உழுதுண்ட கடமை கேட்கக்
குருக்கள் வந்து தட்சணைக்குக் குறுக்கேநிற்கப்
பாவாணர் கவிபாடிப் பரிசு கேட்கப்
பாவிமகன் படுந்துயரம் பார்க்கொணாதே."

இது ஒரு வேளாளனுக்கு நேர்ந்த சங்கடங்களை அமைத்து ஒரு வித்வான் பாடியது.

ஒரு வேளாளன் ஒருநாட் காலையிலெழுந்ததும் பசுத் தொழுவத்திற்குப் போனான். அங்கொரு பசுமாடு கன்று போடுவதற்குப் பெரும் பிரயாசைப்பட்டுக் கொண்டிருந்தது. அப்பொழுது திடீரென்று மானம் இருண்டு பெருமழை பொழிந்தது. அதனால் அவன் வீடு இடிந்து விழுந்தது. வேளாளன் இப்பொழுது என்ன செய்வான். திகைப்புண்டு நிற்கையில் அவன் மனைவி பிரசவ வேதனையடைந்தாள் என்றறிந்தான். அதையறிந்த அவன் இதென்ன சோதனையென்றிருக்கையில், அவனுடைய பண்ணையாள் திடீரென்று இறந்து விட்டானென்று செய்தி யெட்டியது. இச்சமயத்தில் அவன் தன் வயலில் விதைக்கவேண்டிய நிலையும் வந்தது. அதற்காக விதையை யெடுத்துக்கொண்டு அவன் பரபரப்பாய் ஓடினான். அப்பொழுது ஒரு கடன்காரன் எதிர்ப்பட்டுக் "கடனைக் கொடுத்துவிட்டு மறு வேலை பார்" என்று கூறி மறித்துக் கொண்டான்.

என்ன செய்வான் பாவம் இவன்! அந்த விடத்திலேயே பிரமித்து நின்றுவிட்டான். இச்சமயம், ஸர்க்கார் சேவகன்

நிலவரி வசூலுக்காக வந்து வளைத்துக்கொண்டான். இதே சமயத்தில் அவனுடைய ஆசிரியர் குரு தட்சிணைக்காகவந்து நின்றார். இதனால் மனம் பேதித்த வேளாளன், பித்தனைப் போல் நிற்கையில், அவனிடம் வழக்கமாய் வந்து பரிசு பெற்றுப்போகும் வித்வான் அங்கு வந்து அவனைக் கண்டான். அந்தோ என்ன செய்வான் வேளாளன்! செய்வதின்ன தென்று தெரியாமல் மயங்கினான்! இருதலைக் கொள்ளி எறும்பு போல் தத்தளித்தான். அவனுடைய நிலைமை கண்டு வருந்திய ஒரு வித்வான் அவன் பட்டவற்றையெல்லாம் ஒரு பாட்டிலடக்கிப் பாடினார்.

இது மனிதனுக்கு உலகவாழ்வில் இவ்வளவு சங்கடங்களுண்டு என்பதையும் வாழ்வை நல்ல வாழ்வாக நடத்த வேண்டுமாயின் விழிப்பா யிருக்கவேண்டு மென்பதையும் தெரிவிப்பதாம்.

புத்திசாலியான புருஷன்!!

புருஷன்—(மனைவியை நோக்கி) ஏனடி பால் குறைந்திருக்கிறது சட்டியில்?

மனைவி—பால் குறைவானேன்? சட்டி ஓட்டையா?—இல்லை பூனை வந்ததா?—என்று கேட்டுக்கொண்டே உறியிலிருந்து சட்டியைத் தூக்கிப் பார்த்தாள்.

புருஷன்—(சிரித்து) இதென்ன வேடிக்கையாயிருக்கிறது. மூதேவி, சட்டி ஓட்டையாயிருந்தால் அடியிலல்லவா பால் குறைந்திருக்கும்?—அப்படி இல்லையே மேலே யல்லவா பால் குறைந்திருக்கிறது? பார், உன்னுடைய குழிக் கண்ணைக்கொண்டு—என்று கூறித் தலையில் ஒரு குட்டுக் குட்டினான்.

குட்டின ஓசை பட்டென்று கேட்குமுன் அவள் கைச் சட்டி கீழே தொப் என்று விழுந்த ஓசை கேட்டது. ஓசை

கேட்டவளவில், புத்திசாலியின் வீட்டில் பால் ஆறாகப் பெருகியது. என்ன செய்வான் புத்திசாலி; பிரமித்து நின்றுவிட்டான்.

மனைவி—பட் என்னும் ஓசை தொப் என்னும் ஓசை இரண்டையும் விடப் பெரிய ஓசை யுண்டென்று காட்டும்படி தன் வயிற்றில் இரண்டு கரங்களாலும், அடித்துக் கொண்டு படேல் என்னும் ஓசையை உண்டாக்கிவிட்டுப் புத்திசாலியைப் பார்த்து, "உன்னைப் பெற்றாளே மகாராஜி, அவளில்லையே இப்போதிங்கே!" என்று கூறிக்கொண்டு அப்பால் போய்விட்டாள்.

ஒரு புத்திசாலியான மனைவி.

ஒருவன் ஒரு குருவைத்தேடி வேதாந்த சாஸ்திரங் கற்றுக்கொள்ளப் போனான். குரு அவனைத் தன் மாணவனாக ஏற்றுக்கொண்டு வேதாந்தசாஸ்திரங் கற்பித்து வருகையில், "நீ எந்தப் பெண்களைப் பார்த்தாலும் ஸாக்ஷாத் சங்கரியாகவே எண்ணு" என்று உபதேசித்தார். அவன் வீட்டுக்கு வந்ததும் தன் மனைவியினிடம் போய், மௌனமாய் நின்றான். மனைவி, "ஏனிப்படி நிற்கின்றீர்கள்? கவலை யென்ன?" என்று கேட்டாள். அவன், "என் குருநாதன் எனக்கோருபதேசஞ் செய்திருக்கிறார். அது, எந்தப் பெண்ணைக் கண்டாலும் அவளைச் சங்கரி தேவியாக எண்ணவேண்டுமென்பது. அந்த உபதேசப்படி நீ சங்கரியாகின்றாய்! உன்னை நான் வணங்கத் தக்கவன்!" என்றான்.

மனைவி புத்திசாலியாகையினால் இதைக் கேட்டதும் கக்கடவென நகைத்து, "நீர் என்னைச் சங்கரியாகக் காண்பதுண்மையே. இந்த நியாயமிருக்கட்டும்! நான் உம்மைச் சங்கரனாகக் காண்கின்றேன்! ஆதலின் சங்கரனும் சங்கரியும் பிரியாமலிருப்பதே சகஜம்" என்று கூறிப் புருஷனுடைய மனதைத் திருப்பி மகிழ்வித்தாள்.

பெண்களுக்கு மதி.

மோகனம் - ஆதி.

பல்லவி.

நாயகர் பக்ஷமடி - எனக்கது - ஆயிரம் லக்ஷமடி

அநுபல்லவி.

நீ யறிவாயோ அவர் குணம் மானே
நாயறியுமோ ஒரு சந்திப்பானே (நாயகர்)

சரணங்கள்.

1. பர்த்தாவின் பக்ஷம் உள்ளாள் மகராஜி
பர்த்தாவின் பக்ஷம் இல்லாள் பரதேசி
விஸ்தாரமாகத் திரவிய ராசி
மேன்மே லிருந்தும்பய னென்ன சீ சீ (நாயகர்)

2. ஏழையா னாலுமெனக் கெஜமானே
என்று மடிமை யவருக்கு நானே
கூழையுண்டாலு மெனக்கது தேனே
கொண்டாரிருக்கக் குறையென்னமானே (நாயகர்)

3. ஆயிரந் துன்பங்கள் வந்தாலும் நானே
* ஐயர் கிருபை யுண்டாலஞ்சேனே
பாயேர் பிடித்தவ னென்ன செய்வானே
பானே பிடித்தவள் பாக்கியந்தானே (நாயகர்)

(வேதநாயகம் - நீதிநூல்)

---

* ஸீதாதேவி, ஸ்ரீராமருடன் காட்டுக்கு வருவேனென்று கூறியபோது, அவர் "காட்டில் பல துன்பமுண்டு" என்று கூறித் தடுத்தனர். அப்போது ஸீதை, "தாம் அருகிலிருந்தால் நான் எதற்கு மஞ்சேன்" என்றாள். இதனைக் கவனிக்க.

ஏனது சாவகாச வேளை.

வேண்டுகோள்.

ஸ்ரீமான் வரகவி. திரு. அ. சுப்ரமண்ய பாரதி இயற்றியது.

(கல்லார்க்கும் கற்றவர்க்கும்—என்ற மெட்டு.)

தெய்வவிசு வாசமெங்குஞ் சிறப்பதென்று முருகா!
திடமான தேசபக்தி பிறப்பதென்று முருகா!
நைபவருக் கிரங்குமருள் நயப்பதென்று முருகா!
நாடெங்குஞ் செழித்துநலம் பெயப்பதென்று முருகா!
மெய்ம்மறையி னெறியதனை விழைவதென்று முருகா!
வீரவைராக்யமெங்குந் தழைவதென்று முருகா!
கைதவச்சே வகத்தொழிலைக் கடப்பதென்று முருகா!
கைத்தொழிலா மெய்த்தொழிலில் நடப்பதென்று முருகா! (க)

தன்னயங்கொள் சின்னமதியொழிவதென்று முருகா!
சமரஸநல் ஞானமழை பொழிவதென்று முருகா!
அன்னைதந்தை தெய்வமெனல் அறிவதென்று முருகா!
அவலமதி தருங்கல்வி குன்றுவதென்று முருகா!
முன்னவரின் முறைகண்டு முயல்வதென்று முருகா!
மூலன்மூவா யிரந்தமிழும் பயில்வதென்று முருகா!
சின்னச் செய்யுட் குறளினுரை தெளிவதென்று முருகா!
தெள்ளுதமிழ்ப் புலமையெங்கும் விளைவதென்று முருகா! (உ)

கடமையுணர்ந் துழைக்குநலங் காண்பதென்று முருகா!
கற்றவரை மதிக்குங்கலன் பூண்பதென்று முருகா!
குடிமைகுலம் பிறப்புரிமை கொள்வதென்று முருகா!
கொடியபிறர் வழக்கமெல்லாந் தள்வதென்று முருகா!

மடமையெனும் பெரியபகை மாய்ப்பதென்று முருகா!
மானம்பெரி தென்னுமெண்ணம் வாய்ப்பதென்று முருகா!
கொடியிடையார்க் கானகல்வி கொடுப்பதென்று முருகா!
கோழைத்தன மொழியும்வழி யடுப்பதென்று முருகா! (௩)

பாலன்ப்ராஹ்லா தன்வழியில் நிற்பதென்று முருகா!
பார்த்தன்தநர் வித்தையெல்லாங் கற்பதென்று முருகா!
சீலமிக்க பீஷ்மர்பலர் திகழ்வதென்று முருகா!
சீச்சியெனு மேச்சொழிந்து மகிழ்வதென்று முருகா!
ஓலமிட்டுக் குறையிரத்த லொழிவதென்று முருகா!
ஒருமை கெட்டுப் பிதற்றுமதி அழிவதென்று முருகா!
ஆலமெனும் வறுமையன லவிவதென்று முருகா!
ஆண்டவரி யாணெனக்கை குவிவதென்று முருகா! (௪)

பண்டைப் பகீரதன் முயற்சி பலிப்பதென்று முருகா!
பழிக்கஞ்சம் பரதன்குணம் நிலைப்பதென்று முருகா!
கொண்டற்கொடைக் கர்ணன்குணங் கொள்வதென்று முருகா!
கூசும்பெண்மை யொழிந்துமெய்ம்மை விள்வதென்று முருகா!
தண்டித்தடக் கும்கொள்கை தவிர்வதென்று முருகா!
தருமவிர தக்கொடிகள் அவிர்வதென்று முருகா!
பெண்டிர்கற்பின் சோங்குலம் பெறுவதென்று முருகா!
பேசரிய மெய்ஞ்ஞான முறுவதென்று முருகா! (௫)

தமிழ்நாடு ... காப்பக நூலகம்
186448
சென்னை-600 008

Printed at the "Ananda Bodhini" Power Press, Madras.

3-வது ஆண்டு! 3-வது ஆண்டு!!

பாலவிநோதினி

அல்லது

குழந்தைகளின் அன்பன்

இது குழந்தைகளின் கல்வி அபிவிருத்தியின் பொருட்டு
வெளியிடப்பட்டுவரும்

சித்திரப் படங்களுடன் கூடிய
ஒரு மாதாந்தப் பத்திரிகை

இதன் ஆசிரியர்

வரகவி-திரு. அ. சுப்ரமண்ய பாரதி

இதில் குழந்தைகள் உற்சாகத்துடனும் ஊக்கத்துடனும் படித்து எளிதில் உணர்ந்து கொள்ளக்கூடிய சிறு சிறு நீதிக் கதைகள், கட்டுக்கதைகள் புண்யக்கதைகள், யோகினிக் கதைகள், அபூர்வ சூழ்ச்சிகளை விளக்கக்கூடிய ஆச்சரியக் கதைகள், விநோத விசித்திர சம்பாஷணை ரூபயான நாடகத் தொகுதிகள் ஹாஸ்யத் துணுக்குகள், பழமொழிகள், பழமொழிக் கதைகள், மனத்திலே பதித்து வைத்துக்கொள்ளக் கூடிய நீதிவாக்யங்கள், தேசசரித்திரங்கள், சுகாதார விளக்கங்கள்; பதார்த்தகுண விளக்கங்கள் முதலியன வெகு சுலபமான வசனநடையில் எழுதப்படுகின்றன. நல்ல காகிதத்தில் அச்சாய்வருகிறது.

எலிமெண்டரி பாடசாலை உபாத்தியாயர்களுக்கும் பிள்ளைகளுக்கும் மிகவும் உபயோகமானது.

ஒவ்வொரு லைப்ரரியிலும் அவசியம் இருக்கத்தகுந்தது

வருஷசந்தா உள்நாடு	... ரூ.	1	8	0
,, வெளிநாடு ,,	... ,,	2	0	0
மாதிரிப்பிரதி	... ,,	0	2	0
முதல்வால்யம் கலிகோ கில்டு பைண்டு	... ,,	2	0	0
2-வது வால்யம் ,,	... ,,	2	0	0

விலாஸம்:—ஸ்ரீ பாலசுப்ரமண்யம் அண்டு கம்பெனி,
ராயப்பேட்டை போஸ்ட், சென்னை.

Dr. V. R. SUNDARAM'S FAMOUS

Ayurvedic Medicines

கௌரி பாலாம்ருத ஸஞ்சீவி

குழந்தைகளுக்குச் சாதாரணமாய் உண்டாகும் பலவித நோய்களைக் கண்டிக்கத்தக்க ஔஷதங்கள் ஆறு அடங்கிய அழகிய பெட்டி

சாதாரணமாகக் குழந்தைகளுக்கு உண்டாகும் நோய்களைக் கண்டிக்கக்கூடிய பின் வரும் ஆறுவிதமான மருந்துகள் பிரத்தியேகமான சீசாக்களிற் போட்டு ஒரு பெட்டியில் வைக்கப்பட்டிருக்கின்றன. (1) குழந்தைகளின் ஜலிப்பு, சளிக்கட்டு இவைகளுக்கு உபயோகிக்கும் கௌரி கோரோஜனை (2) ஜுரம் ஜன்னிகள் வந்த காலத்தில் கொடுக்கும் கௌரி கஸ்தூரி (3) ஸ்நானம் செய்வித்தபின் குழந்தைகளுக்கு உரைத்துப் போடும் உரை மாத்திரையாகிய கௌரி பால கற்பம் (4) குழந்தைகளின் வயிற்றில் கட்டுகள் சேராமல் பேதி யாவதற்காகக் கொடுக்கும் கௌரி பால விரேசனி (5) குழந்தைகளுக்குண்டாகும் வயிற்றுப்போக்கை நிறுத்தவல்ல கௌரி குறைநந்தம் (6) குழந்தைகளுக்கு மாந்தங்கள் வந்தால் கொடுக்கும் கௌரி பாலபோதனி, இவ்வாறு அரிய மாத்திரைகள் இப்பெட்டியில் அடக்கம் செய்யப்பட்டிருக்கின்றன. உபயோகிக்கும் வழிகளைப் பெட்டிக்குள்ளிருக்கும் பிரயோக விதியில் காண்க. பெட்டி ரூ. 3.

கௌரி பால ரட்சண்யகுளிகை

குழந்தைகளுக்குண்டாகும் சோகை, காமாலை. இவைகளுக்கு மருந்து.

பலவித நோய்களில் அடிபட்ட குழந்தைகளுக்கும், கர்ப்ப சம்பந்தமான உஷ்ணம் ஊறி அதனால் இரத்தங்கெட்டு, சோகை, காமாலை முதலியவை கண்ட குழந்தைகளுக்கும் கொடுக்கக்கூடிய சிறந்த மருந்து இதுவே. 25 மாத்திரை அணா 12.

விலாஸம்:—ஸ்ரீ கௌரி ஆயுர்வேத வைத்திய மந்திரம்,
363, பைக்ராப்ட்ஸ் ரோட், இராயப்பேட்டை, சென்னை.